**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 -ம் நாள் வியாழக்கிழமை

**O.S. No. 145/2024**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுபாஷ் சந்திர போஸ் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ராமதாஸ் | கிராமம் | : | புதுக்குடி |
| | | | தொழில் | : | விவசாயம் |
| | | | வயது | : | 52 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் புல எண் தெரியுமா என்றால் தெரியும். புல எண்.78/4 ஆகும். வழக்கு சொத்து கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் பூசாரி மானியமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் புதுக்குடி கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து உள்ள கிராமத்தில் கிராம சமுதாய வீதத்தாரர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். கிராம சமுதாய வீதத்தாரர்கள் இடையில் தலைவர், செயலாளர் போன்ற பதவிகள் ஏதும் உள்ளதா என்றால் அவ்வாறு ஏதும் இல்லை. வழக்கு சொத்து உள்ள கிராமத்தில் மானியம் என்பதே ஒன்று கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமான பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனது பிரமான பத்திரத்தில் பத்தி 2 ல் பூசாரி மானியம் என்பது தனி சொத்தாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிடாரி அம்மன் கோவிலில் பூசாரி பாலையன் என்ற நபர் இருந்தார் என்றால் சரிதான். பூசாரி பாலையன் இறந்த பிறகு கோவிலை சுசிலா என்ற நபர் பராமரித்து வந்தார் என்றால் இல்லை, ராஜேந்திரன் என்பவர் தான் பராமரித்து வந்தார். எனது கிராமத்தில் இரண்டு பிரிவினர்கள் தரப்பில் மீன் பிடி உரிமம் பொதுவான குளத்தின் உரிமம், தெய்வீக அணிகலன் மற்றும் உண்டியல் சாவி ஆகியவற்றை பொறுத்து பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை. இந்த பிரச்சனை தொடர்பாக இரு தரப்பினருக்கிடையே தாசில்தார் வந்து சமாதானம் பேசினார் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க நீதிமன்ற அனுமதியின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 10:24:34 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.